நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள்.31.07.2020.

## இயல்புக்கூட்டம்

அன்புடையீர்,

2020ம் வருடம் ஜூலை 31.07.2020ந் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் காலை 10.00 மணிக்கு ஆத்தூர் நகராட்சியின் இயல்புக்கூட்டம் நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலித்து முடிவு செய்ய உள்ளது.

தனி அலுவலர்,
ஆத்தூர் நகராட்சி.

## பொருள்கள்

1. ஆத்தூர் நகராட்சி பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புறசாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் (TURIP) 2020–2021 மேற்கொள்ளப்படும் சாலை பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17349/2019/இ3, நாள்.14.07.2020ல் ரூ.380.00 இலட்சத்திற்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணிகளுக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி இப்பணிக்கு நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு திட்ட மதிப்பீடுகள் அனுப்ப தனி அலுவலர் ஒப்புதல் கோரப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | சிப்பம் 1 வார்டு எண்.1ல் எல்.ஆர்.சி மண்டபம் வடக்கு பகுதி கிழமேல் சாலை , நாரயணபுரம் வடக்கு பகுதி (பால் சொசைட்டி ரோடு), வார்டு எண்.3ல் சந்தன கிரி மெயின் ரோடு, வார்டு எண்.4ல் கலைஞர் காலனி வார்டு எண்.5 ரங்கன் நகர், வார்டு எண்.7 புதிய கல்லாநத்தம் ரோடு வடக்கு பகுதி குறுக்கு தெருக்கள் மற்றும் புத்து கோவில் வடக்கு புறசாலை வார்டு எண்.7 கதிரவன் ரைஸ் மில் முதல் தேசீய புறவழி சாலை சந்திப்பு வரை ஆகிய பகுதிகளில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி மற்றும் வார்டு எண்2ல் வடுகம்பட்டி சாலை சந்திப்பு முதல் பிசி காலனி வரை, வார்டு எண்.4 நாராயணபுரம் கிழமேல் மற்றும் தென் வடல் குறுக்கு சாலைகள், வார்டு எண்.7 கதிரவன் ரைஸ் மில் பகுதி குறுக்கு தெருக்கள் மற்றும் வார்டு எண்.7அவ்வையார் தெரு கிழமேல், மற்றும் தென்வடல் குறுக்கு தெருக்கள், ஆகிய பகுதிகளில் பேவர்பிளாக் சாலை சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | ரூ.190.00 |
| 2 | சிப்பம் 2 வார்டு எண்.3ல் இந்திரா நகர், வார்டு எண்.19ல் பாரதியார் தெரு ISP கழிப்பிடம் சாலை, வார்டு எண்.26ல் காந்தி நகர் 60அடி சாலை, வார்டு எண்.31ல் வ.உ.சி நகர் மேற்கு பகுதி குறுக்கு சாலைகள், வார்டு எண்.32ல் அம்பேத்கார் நகர்குறுக்கு தெருக்கள், வார்டு எண்.33ல் கண்ணாடி மில் பகுதி & தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேற்கு பகுதி குறுக்குதெருக்கள் மற்றும் பாரதியார் பள்ளி முதல் செங்காட்டு காலனி வரை ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.8ல் நேருநகர், வார்டு எண்.16ல் கருத்தான் தெரு, வார்டு எண்.18ல் காதர் பேட்டை, வார்டு எண்.25ல் கோரிதெரு, எண்.31ல் மந்தை வெளியாக்கம் மற்றும் அந்தோணி நகர் ஆகிய பகுதிகளில் பேவர்பிளாக் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | ரூ.190.00 |
| | | |
| | மொத்தம் | ரூ.380.00 |

(இலட்சத்தில்)

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மான்யநிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|
| ஆத்தூர் | 380.00 | 285.00 | 95.00 |

இதில் ரூ.285.00 இலட்சம் தமிழ்நாடு நகர்ப்புறசாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP)2020-2021ன்கீழ் மான்யமாகவும் ரூ.95.00 இலட்சம் நகராட்சியின் பங்குத் தொகையாகவும் மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே ரூ.95.00 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்1364 /2020/இ1)

2. ஆத்தூர் நகராட்சியில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காக கிருமி நாசினி செய்யவும் மற்றும் கொரோனா நோய் தடுப்பு பரிசோதனை செய்யப்படும் நபர்களை தங்கி இருக்கும் அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி வளாகத்தில்குடிநீர் விநியோகம் செய்ய உள்ளதற்காகவும், புதியதாக 1000லிட்டர் கொள்ளளவு கொண்ட பி.வி.சி டேங்க் இரண்டு எண்ணிக்கை சப்ளை செய்ய ஆகும், செலவினம் ரூ.18,000/-ஆகும். பொதுமக்களின் நலன் கருதி விரைந்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பணியின் அவசர அவசிய கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதி 1920–ன்படி பிரிவு 15–ன்கீழ் மேற்படி பணிகளை செய்தற்கு தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனிஅலுவலர் பதிவு செய்யலாம்.
2. மேற்படி செலவினத்தை கொரோனா நோய் தடுப்பு அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்1742 /2020/இ2)

3. ஆத்தூர் நகராட்சிக்கு ஆத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2019–2020ம் ஆண்டிற்கான நிதியில் ஆத்தூர் நகராட்சி 32ல் அம்பேத்கார் நகர் பகுதியில் நான்கு முகம் கொண்ட தெருவிளக்குகள் அமைத்தல் பணிக்கு ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சேலம், அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண் 1094/2019/அ–2, நாள்08.07.2020ல் நிர்வாக அனுமதி வழங்கி வரபெற்ற கடிதத்தினை தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

1. மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சேலம், அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண் 1094/2019/அ–2, நாள்08.07.2020ல் நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற கடிதத்தினை தனிஅலுவலர் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடரவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம். (ந.க.எண்1756 /2020/இ2)

4. ஆத்தூர் நகராட்சிக்கு ஆத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2019–2020ம் ஆண்டிற்கான நிதியில் ஆத்தூர் நகராட்சி 12ல் திரௌபதிஅம்மன் கோவில் அருகில் நான்கு முகம் கொண்ட தெரு மின் விளக்குகள் அமைத்தல் பணிக்கு ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சேலம், அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண் 1094/2019/அ–2, நாள்18.05.2020ல் நிர்வாக அனுமதி வழங்கி வரபெற்ற கடிதத்தினை தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சேலம், அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண் 1094/2019/அ–2, நாள்08.07.2020ல் நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற கடிதத்தினை தனிஅலுவலர் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடரவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம். (ந.க.எண்1531 /2020/இ2)

5. ஆத்தூர் நகராட்சி பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புறசாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் (TURIP) 2020–2021 மேற்கொள்ளப்படும் சாலை பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9025/2020/இ3, நாள்.17.07.2020ல் ரூ.380.00 இலட்சத்திற்கு தார்சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணிகளுக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து இப்பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற கடிதத்தினை தனிஅலுவலர் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | சிப்பம் 1 வார்டு எண்.1ல் எல்.ஆர்.சி மண்டபம் வடக்கு பகுதி கிழமேல் சாலை , நாரயணபுரம் வடக்கு பகுதி (பால் சொசைட்டி ரோடு), வார்டு எண்.3ல் சந்தன கிரி மெயின் ரோடு, வார்டு எண்.4ல் கலைஞர் காலனி வார்டு எண்.5 ரங்கன் நகர், வார்டு எண்.7 புதிய கல்லாநத்தம் ரோடு வடக்கு பகுதி குறுக்கு தெருக்கள் மற்றும் புத்து கோவில் வடக்கு புறசாலை வார்டு எண்.7 கதிரவன் ரைஸ் மில் முதல் தேசீய புறவழி சாலை சந்திப்பு வரை ஆகிய பகுதிகளில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி மற்றும் வார்டு எண்2ல் வடுகம்பட்டி சாலை சந்திப்பு முதல் பிசி காலனி வரை, வார்டு எண்.4 நாராயணபுரம் கிழமேல் மற்றும் தென் வடல் குறுக்கு சாலைகள், வார்டு எண்.7 கதிரவன் ரைஸ் மில் பகுதி குறுக்கு தெருக்கள் மற்றும் வார்டு எண்.7அவ்வையார் தெரு கிழமேல், மற்றும் தென்வடல் குறுக்கு தெருக்கள், ஆகிய பகுதிகளில் பேவர்பிளாக் சாலை சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | ரூ.190.00 |
| 2 | சிப்பம் 2 வார்டு எண்.3ல் இந்திரா நகர், வார்டு எண்.19ல் பாரதியார் தெரு ISP கழிப்பிடம் சாலை, வார்டு எண்.26ல் காந்தி நகர் 60அடி சாலை, வார்டு எண்.31ல் வ.உ.சி நகர் மேற்கு பகுதி குறுக்கு சாலைகள், வார்டு எண்.32ல் அம்பேத்கார் நகர்குறுக்கு தெருக்கள், வார்டு எண்.33ல் கண்ணாடி மில் பகுதி & தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேற்கு பகுதி குறுக்குதெருக்கள் மற்றும் பாரதியார் பள்ளி முதல் செங்காட்டு காலனி வரை ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.8ல் நேருநகர், வார்டு எண்.16ல் கருத்தான் தெரு, வார்டு எண்.18ல் காதர் பேட்டை, வார்டு எண்.25ல் கோரிதெரு, எண்.31ல் மந்தை வெளிபாக்கம் மற்றும் அந்தோணி நகர் ஆகிய பகுதிகளில் பேவர்பிளாக் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | ரூ.190.00 |
| | | |
| | மொத்தம் | ரூ.380.00 |

(இலட்சத்தில் )

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மான்யநிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|
| ஆத்தூர் | 380.00 | 285.00 | 95.00 |

இதில் ரூ.285.00 இலட்சம் தமிழ்நாடு நகர்ப்புறசாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2020-2021ன்கீழ் மான்யமாகவும் ரூ.95.00 இலட்சம் நகராட்சியின் பங்குத் தொகையாகவும் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே ரூ.95.00 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9025/2020/இ3, நாள்.17.07.2020ல் ரூ.380.00 இலட்சத்திற்கு தார்சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற கடிதத்தினை பார்வையிட்டு பதிவு செய்யலாம். மேல்நடவடிக்கை தொடரலாம்.(ந.க.எண்1364 /2020/இ1)

6. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு தடுப்பு பணியில் கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு 60 DBC பணியாளர்களின் ஒப்பந்தகாலம் 31.07.2020ம் தேதியுடன் முடிவடைவதால், மேலும் 3 மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மகளிர் சுயஉதவி குழுக்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளி பெறவும், அதற்கான செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கும் தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. ஒப்பந்த அடிப்படையில் மகளிர் சுய உதவிக்குழுக்களிடம் இருந்து குறுகியகால ஒப்பந்தப்புள்ளி பெற்று 3 மாதங்களுக்கு DBC பணியாளர்க.ன் பணிக்கு வைத்துக் கொள்ள தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.
2. செலவினம் ரூ.10.00 இலட்சம் நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம். (3163/2017/எச்1)

7. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மற்றும் பிளாஸ்டிக் சம்மந்தமாக அபராத கட்டண ரசீது பில்புக் 50 புதியதாக பிரிண்ட செய்ய உள்ளூர் பிரிண்ட் நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட விலைப்புள்ளி அங்கீகரிக்கவும், குறைந்த விலைப்புள்ளி பெறப்பட்ட வீனஸ் ஆப்செட் நிறுவனத்திற்கும் தனிஅலுவலரின் அனுமதி அனுப்பப்படுகிறது.

1. வீனஸ் ஆப்செட் – ரூ.4900/–
2. சண்முகா பிரஸ் – 5390/–
3. ஆதவன் பிரிண்டர்ஸ்– 5635/–

அலுவலகக் குறிப்பு

1. குறைந்த விலைப்புள்ளி பெறப்பட்ட வீனஸ் ஆப்செட் நிறுவனத்திற்கு பணி உத்திரவிற்கு அனுமதிக்கலாம்.
2. பிரிண்ட் செய்வதற்கான தொகை ரூ.5000/–ஐ திடக்கழிவு மேலாண்மை நிதி (அ) பொது நிதியில் இருந்து செலவழிக்க அனுமதிக்கலாம். (ந.க.எண்.1824/2020/எச்1)

8. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN.77.B.5356 ஐ ஆயில் சர்வீஸ், ஆயில் பில்டர், டீசல் பில்டர் மற்றும் பிரேக் செக்கப் ஆகியன செய்தற்கான செலவினம் ரூ.4885/—ஐ மேற்படி வாகனம் ஓட்டுனர் திரு.ஜி.மோகன் என்பவரால் செலவு செய்யப்பட்டது. எனவே செலவு செய்த தொகை ரூ.4885/—யினை மேற்படியாருக்கு வழங்க தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதி வழங்கலாம், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2. ஈப்பு வாகனம் பழுது நீக்கம் செய்த செலவினத்தை வாகனம் ஓட்டுனருக்கு வழங்க தனி.அலுவலர் அனுமதி வழங்கலாம் (1806 /2020/இ2).

9. ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆத்தூர் கிராமம் வார்டு—F பிளாக்—9 நகரளவை எண்.4/2ஏல் 2.28 ஏக்கர் (அ) 9926.75 சதுர மீட்டர் பரப்பில் புதிய குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு.ஏ.கே.முருகேசன் த/பெ.கொழந்தைவேல் என்பவரால் மனைப்பிரிவு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் அவர்கள் தமது கடிதம் ந.க.எண்.2744/2019/சேம—3, நாள்.25.06.2020ல் முதற்கட்டமாக சாலையமைப்பு வரைபடத்தினை (ROAD PATTERN MAP) நிபந்தனைகளுடன் ஒப்புதல் செய்து அனுப்பியுள்ளார். அதன்படி மேற்படி மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான சாலை வசதி, வடிகால் வசதி மற்றும் சிறுபாலங்கள் ஆகிய பணிகளை நல்லமுறையில் செய்துள்ளார். அதனை நகராட்சி பொறியார் அவர்களால் ஆய்வு செய்து பணிகள் நல்லமறையில் செய்யப்பட்டுள்ளதாக சான்றளிக்கப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் வசதிக்கான பணிக்கும், தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கும் மதிப்பீடுகள் முறையே ரூ.1,75,000/— மற்றும் ரூ.17,000/—க்கும் தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, மேற்படி தொகைகளை சலான் எண்ண்ள் முறையே 045/01/4/20—21/000192, நாள்.31.07.2020ல் நகராட்சி கருவூலத்தில் செலுத்தி அதன் இரசீது நகலும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி மனைப்பிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலைகள், பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை நகராட்சியால் பராமரிக்க வேண்டி நகராட்சி வசம் தானமாக ஒப்படைக்க அனுமதி கோரியுள்ளார். எனவே மேற்படி மனைப்பிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலைகள், பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை நகராட்சியால் பராமரிக்க வேண்டி நகராட்சி வசம் தானமாக பெறுவதற்கும், தானமாக பெற்ற பின்னனர் மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் அவர்களால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் நகராட்சியால் அங்கீகாரம் அளிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பூங்கா இடங்களை தானமாக பெற அனுமதிக்கலாம்.
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் அவர்களால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் நகராட்சியால் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கலாம். (ந.க.எண்.1967/2019/எப்1)

10. ஆத்தூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2020—2021 நிதியின் கீழ் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் மேம்பாடு செய்யும் பணிகளுக்கு 18.08.2020ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும் நிலையில் உள்ளதால் உள்ளது. மேற்படி பணிக்கு E —Tender பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். இதற்கு நகராட்சி பொறியாளர் அவர்களின் E—Tender கார்டு பயன்பாடு காலம் முடிவடைந்த நிலையில் உள்ளது. எனவே மீண்டும் Dsc கார்டை புதுப்பிக்க வேண்டியுள்ளது. இப்பணியினை திரு.விஜயகுமார்& விஜயராஜ் சுப்ரமணியபுரம் திருச்சி என்ற E—Tender பதிவேற்றம் செய்யும் சென்டரில் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தொகை ரூ.1400/—யினை மேற்படியாருக்கு வழங்க தனி அலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. நகராட்சி பொறியாளர் அவர்களின்Dsc கார்டை புதுப்பிக்க திரு.விஜயகுமார்& விஜயராஜ் சுப்ரமணியபுரம் திருச்சி என்ற E–Tender பதிவேற்றம் செய்யும் சென்டரில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

2.தனி அலுவலர் அனுமதி வழங்கலாம், செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.( 1841 /2020/இ2),

11. ஆத்தூர் நகராட்சி வார்டு எண்.4ல் முல்லைவாடி நகராட்சி பள்ளி முன்புறமுள்ள சிறுபாலம், வார்டு எண்.5ல் ரங்கன் நகர் பகுதியில் உள்ள சிறுபாலம், வார்டு எண்.15ல் உழவர் சந்தை அருகிலுள்ள சிறுபாலம் மற்றும் வார்டு எண்.26ல் காந்தி நகர் ஆகிய பகுதியிலுள்ள சிறு பாலங்களைபழுது நீக்கம் மற்றும் புதுப்பித்தல் பணிக்கு ஆகும், செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு தனிஅலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம். செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனிஅலுவலர் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடர தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.2067/2020/இ2)

12. ஆத்தூர் நகராட்சி வார்டு எண்.32ல் அம்பேத்கார் நகர் பகுதியில் உள்ள ISP கழிப்பிடம் பழுதடைந்து பயன்படுத்த முடியாமல் உள்ளதால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் குறிப்பாக பெண்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்படி கழிப்பிடத்தைதை, பழுது நீக்கம் செய்து பொதுமக்கள் பயன்படுத்து வகையில் பராமரிப்பு பணிகள் செய்ய ஆகும், செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு தனிஅலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.தனிஅலுவலர்அனுமதி, வழங்கலாம், செலவினத்தை குடிநீர் நிதி/வருவாய்நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனிஅலுவலர் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடர தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.2068/2020/இ2)

13. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான காந்தி நகர் நடுநிலைப்பள்ளியில் சுமார் 500 மாணவ, மாணவியர்கள் கல்வி பயலுவதால் இப்பள்ளியில் கூடுதலாக வகுப்பறைகளுக்கு ஜன்னல் கதவுகள் (Cub board) வராண்டா பகுதியில் டைல்ஸ், புதிய மற்றும் பழைய வகுப்பு அறைகளுக்கு வர்ணம் பூசுதல், கதவு மற்றும் ஜன்னல்களுக்கு பெயிண்ட் அடித்தல் போன்ற பராமரிப்பு பணிகள் மற்றும் வயரிங், குடிநீர் பணிகள் ஆகியன செய்து தரகோரி மேற்படி பள்ளியின் தலைமை ஆசிரியர் தனது கடிதத்தில் கேட்டுள்ளார். மேற்படி பணிமேற்கொள்ள ஆகும், செலவினம் ரூ 6.50 இலட்சத்திற்கு தனிஅலுவலர் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியதன் பேரில் மேற்படி பணிக்கு 17.07.2020ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரபெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்ய தனி அலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம்அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு. ஆர்.செல்லக்கண்ணு ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 0.03% மதிப்பீட்டுவிலையைவிட குறைவு |
| 2 | திரு. எ.லோகநாதன் ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 0.09% மதிப்பீட்டுவிலையைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.செல்லக்கண்ணு ஆத்தூர் என்பவரின் 0.03% மதிப்பீட்டு விலையை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை குறித்து முடிவு செய்ய தனிஅலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03% மதிப்பீட்டு விலையை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர்.செல்லக்கண்ணு ஆத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை தனிஅலுவலர் ஏற்கலாம், பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கவும், தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்1450 /2020/இ2)

14. இந்நகராட்சியின் பொது சுகாதாரபிரிவின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் டெங்கு தடுப்பு பணிகளை நிர்வாக நலன் கருதி உள்ளூர் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் வாயிலாக மேற்கொள்ள தனிஅலுவலர் முன்அனுமதியுடன் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த அடிப்படையில் டெங்கு தடுப்பு பணிகளை செய்து கொடுக்க 29.07.2020 அன்று வரப்பெற்ற மூன்று ஒப்பந்தத்தினை தனிஅலுவலரின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**DBC பணியாளர்களுக்கு 1 நாளைக்கு கொடுக்க சம்மதித்த ஊதிய விவரம்**

| | | |
|---|---|---|
| 1 | ஸ்ரீ அம்மன் மகளிர் SHG | ரூ.356/– |
| 2 | ஜோதி மகளிர் SHG | 390/– |
| 3 | ரோஸ் மகளிர் SHG | 410/– |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற மூன்று ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக வரப்பெற்ற “ஸ்ரீ அம்மன் மகளிர் SHG ஆத்தூர்” என்ற குழுவினருக்கு டெங்கு தடுப்பு பணிகாலத்திற்கான 01.08.2020 முதல் 31.10.2020 வரையிலான அடுத்த மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் செய்துதர தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று உத்திரவினை வழங்கியதை தனிஅலுவலர் ஏற்கலாம்.(3163/2017/எச்1)

15. ஆத்தூர் நகராட்சி வார்டு எண்.17ல் இயங்கி வரும் அம்மா உணவகத்தின் மூலமாக தற்போது கொரோனா கேர் சென்டரில் உள்ள அனைத்து நபர்களுக்கு காலை, மதியம் மற்றும் இரவு ஆகிய நேரங்களில் உணவு தயாரித்து வழங்கி வருவதால், அம்மா உணவகத்தில் உள்ள பழுதுகளை விரைந்து செய்யவும் மற்றும் வார்டு எண்.31ல் MCC சென்டர் ஆகியவற்றில் உள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்தல் பணிக்கு ஆகும் செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு தனிஅலுவலரின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். செலவினத்தை கொரோனா நிதி/ வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலம்.
2. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடர தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

16. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொசுப்புழு ஒழிப்பு பணி மற்றும் வளர்ச்சியடைந்த கொசுக்களை அழிக்க பயன்படுத்தும் மருந்துகள் 2020–2021ம் ஆண்டிற்கு கீழ்கண்டவாறு வாங்க வேண்டியுள்ளது.

1. டெமோபாஸ் மருந்து – 100 லிட்டர்கள்
2. பைரத்தியான் மருந்து– 100 லிட்டர்கள்.

மேற்கண்டவாறு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு தேவையான மருந்துகள் வாங்குவதற்கு தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. பொது சுகாதாரப்பணி மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணியின் அவசியம் கருத்தி மேற்கண்ட மருந்துகள் 2020–2021ம் ஆண்டிற்கு வாங்குவதற்கு தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. உத்தேச செலவினம் ரூ.4.5 இலட்சம் நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.402/2019/எச்1)

17. மாண்புமிக.தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் 2017–2018 முதல் 2019–2020ம் ஆண்டு இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மூன்றாண்டு திட்டப் பணிகளை பொதுமக்கள் அறியும் வண்ணம் விளம்பரம் செய்ததற்கான செலவினத் தொகை ரூ.26,026/–ஐ தினத்தந்தி நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்க தனி அலுவலர் அனுமதிக்கு மன்ற பொருள் வரைவு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியில் வழங்கலாம். (ந.க.எண்.1182/2020/இ1)

18. ஆத்தூர் நகராட்சியில் (2017–2018 முதல் 2019–2020) வரை மூன்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகளை பொதுமக்கள் அறியும் வண்ணம் காலைக்கதிர் நாளிதழில் 12.06.2020 அன்று விளம்பரம் செய்ததற்கான செலவினத் தொகை ரூ.9450/–ஐ வழங்க மன்றபொருள் வரைவு தனி அலுவலர் அனுமதிக்க வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியில் வழங்கலாம். (ந.க.எண்.1513/2020/இ1)

19. ஆத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுலை–2020 மாதத்திற்கான நாட்குறிப்பினை தனி அலுவலரின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

தனி அலுவலர் பதிவு செய்யலாம்.

தனி அலுவலர்,
ஆத்தூர் நகராட்சி.